# தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்க பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

பதிவு எண். 142/80 நாள் : 28.02.2025

அனைத்து பொது உறுப்பினர்களுக்கும்,
அன்பிற்கினியீர், வணக்கம்.

எதிர்வரும் **22.03.2025 சனிக்கிழமை** காலை 09.30 மணி முதல் திருச்சி மாநகரின் மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள **கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில்** தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் **42-வது பொதுக்குழுக் கூட்டம்** நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தின் பொருள் பின்வருமாறு.

**கூட்டப் பொருள் :**

1. பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை
2. 2023-24 ஆண்டின் தணிக்கை செய்த கணக்கினை சமர்ப்பித்தல் - பொருளாளர்
3. மாநில சங்கம் தொடர்ந்த வழக்கு தொடர்பான விளக்கவுரை - தலைவர்
4. சங்கத்திற்கு பட்டய கணக்காளரை (Auditor) நியமித்தல் தொடர்பாக.
5. நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான நியமன தேர்தல் நடைமுறைகள்.
6. தலைவர் அனுமதியுடன் வியாபாரம் சம்மந்தமான பொது உறுப்பினர்களின் கருத்துக்கள்.

நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் தேர்தல் பற்றிய அட்டவணை மற்றும் அறநெறிகள் தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் இணையதளத்தில் 28.02.2025ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆகவே மேற்படி பொதுக்குழுவில் மாநில சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் மற்றும் இணைப்பு மாவட்ட சங்க நிர்வாகிகளும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

மாநில சங்கத்தின் இணையதள முகவரி : **www.tnpda.in**

தங்களன்புள்ள,
**மு.ஹைதர் அலி**
பொதுசெயலாளர், தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம்.
முகாம் : ஒட்டன்சத்திரம்.

Read Makkal Kural / Trinity Mirror